I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.323/2019

| | | |
|---|---|---|
| Name | : | Vasanathakumari |
| Husband Name | : | Venkatesan |
| Age | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.01.2025

**விசாரணை தொடங்கும் நேரம்:**11.50 a.m.

**முதல் விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சென்ற என் மகனின் இருச்சக்கர வாகனத்தின் பதிவு எண். என்ன என்றால் எனக்கு தெரியாது. ராஜவேல் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு எண் எனக்க தெரியாது. அது என்ன கம்பனி வண்டி என்றாலும் எனக்கு தெரியாது. எனக்கும் என் தம்பி ராஜவேலு வண்டிக்கும் இடையே 50 கி.மீ இருக்கும். ராஜவேல் வந்த வண்டிக்கு பின்னாடி இன்னொரு வண்டி வந்து இடித்தது. அந்த இடித்த வண்டியின் பதிவு எண் தெரியாது. போலீசாருக்கு புகார் கொடுத்தது யார் என்றால் என் தம்பி ராஜவேல். நான்

காவல் நிலையம் போகவில்லை. ராஜவேல் எங்கே புகார் கொடுத்தார் என்றால் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார் என்ற நேரம் எனக்க தெரியாது. அன்றைக்கு புகார் கொடுத்தாரா அல்லது மறுநாள் புகார் கொடுத்தாரா என்று தெரியாது. அவருக்கும் அடிப்பட்டிருந்தது. அவரையும் அவரது மனைவியையும் சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டோம். இருவரும் சேர்ந்து மருத்துவமனையில்தான் இருந்தார்கள். ராஜவேல் 4, 5 நாட்கள் கழித்து தான் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். விபத்து நடந்த நாள் 17.03.2016 என்றாலும் ராஜவேல் டிஸ்சார்ஜ் செயய்ப்பட்ட தேதி சுமார் 20,21 ம் தேதி.

அதன் பிறகு தான் அவர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தாரா என்றால் ஆம். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நீதிமன்றத்திற்கு சென்று சாட்சியம் எதாவது அளித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் குற்ற பத்திரிக்கை யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் பின்னால் வந்து இடித்த வண்டியின் மீது தான். விபத்து ஏற்பட்ட போது ராஜவேலுக்கு என்ன வயது என்றால் 49.

அவர் எப்போதும் வாகனத்தை மெதுவாகதான் ஓட்டுவார். ராஜவேல் சொன்னதின் பேரில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**விசாரணை முடிந்த நேரம்:**12.50 p.m.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.